# அடிக்கடி கேட்கப்படுகின்ற வினாக்கள்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
**இலங்கை மத்திய வங்கி**
**CENTRAL BANK OF SRI LANKA**

## 2021 ஒத்தோபர் 28 திகதியிடப்பட்ட 2251/42 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள்

நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு வசதியளிப்பதனை முதன்மையாகக் கொண்டு, உள்நாட்டு சந்தைகளில் வெளிநாட்டு நாணயத்தின் அதிகரித்த திரவத்தன்மை மற்றும் நிலையான செலாவணி வீதம் என்பவற்றின் எதிர்பார்ப்பில் நாணயவிதிச் சட்டத்தின் கீழ் திருத்தி வழங்கப்பட்ட விதிகள் தொடர்பில் வங்கிகள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் பொதுவான கரிசனைகளை தெளிவுபடுத்துவதற்காக பின்வரும் 'அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள்' மற்றும் பதில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. **"2021ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள்" (விதிகள்) பிரயோகத்தின் நோக்கம் என்ன?**
   i. இவ்விதிகள் 2021 ஒத்தோபர் 28 அன்று அல்லது அதற்கு பின்னர் இலங்கையில் கிடைக்கப்பெறகின்ற அனைத்து ஏற்றுமதிப் பெறுகைகளுக்கும் பொருந்தும்.
   ii. இவ்விதிகள் இலங்கையில் வதியும் நபர்களினால் இலங்கைக்கு வெளியில் வதியும் நபர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவம்/தொழில், உத்தியோகம் மற்றும் வியாபாரப் பணிகள் உட்பட பணிகளின் அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் பொருந்தும். அத்தகைய பெறுகைகளை பெறுகின்ற கணக்குகளானது இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பராமரிக்கப்பட முடியும்.
   iii. ஏற்றுமதி பத்திரங்கள் கொள்வனவின் (பத்திர விடுவிப்புக்கள்) பெறுகைகள் ஏற்றுமதிப் பெறுகைகளாகவே கருதப்படும்.
   iv. இறக்கியேற்றல் வியாபார கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வதியும் நபர்களினால் பெறப்பட்ட இலாபம்/தரகு வருமானம் பணிகள் ஏற்றுமதி மீதான பெறுகைகளாக கருத்தில் கொள்ளப்படும்.
   v. அத்தகைய பணிகள் வதியாதவர்களுக்கு வழங்கப்படுமாயின், வதியும் சரக்கு அனுப்புபவர்கள் அதேபோன்று கப்பல்/வானூர்தி முகவர்களால் பெறப்பட்ட முகவர் தரகு போன்ற வெளிநாட்டு நாணய வருவாய்கள் இவ் விதிகளில் உள்ளடக்கப்படும்.
2. **வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களின் தொழிலாளர் பணவனுப்பல்கள் இவ் விதிகளுக்கு உட்பட்டதா?**
   வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களால் நாட்டிற்கான உள்முக பணவனுப்பல்களுக்கு (தொழிலாளர் பணவனுப்பல்கள்) இவ் விதிகள் பொருந்தாது.
   ஏற்றுமதியானது இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்படாதவிடத்து, சேகரிப்பு நோக்கங்களுக்காக மட்டும் கரைகடந்த வங்கத்தொழில் பிரிவில் வதியாதோரால் பேணப்படும் கணக்குகளுக்கு கிடைக்கப்பெற்ற பெறுகைகளும் இவ் விதிகளுக்கு உட்படமாட்டாது.
3. **2021 ஒத்தோபர் 28இற்கு முன்பு ஏற்கனவே பெறப்பட்டு அத்திகதி வரை 30 நாட்களினை விஞ்சாததனால் மாற்றப்படாது இருப்பதும் ஏற்றுமதித் திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் இருப்பதுமான ஏற்றுமதிப் பெறுகைகளுக்காக இவ்விதிகளின் பிரயோகம் யாது?**
   2021 ஒத்தோபர் 28 வரை அத்தகைய மாற்றலானது நடைபெறாதவிடத்து, 2021 ஒத்தோபர் 28 வரை ஏற்கனவே நாட்டிற்குள் திருப்பியனுப்பப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகள் 2021 மே 28 திகதியிடப்பட்ட 2229/9 இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகளில் குறித்துரைக்கப்பட்டவாறு மாற்றல் தேவைப்பாடுகளுக்கு (அதாவது ஏற்றுமதிப் பெறுகைகளின் 25%இனை கட்டாயமாக மாற்றல்) உட்பட்டதாகும்.
4. **பெறப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் 100%இனை ஏற்றுமதியாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக செலுத்தலாம் எனும் விதியின் பிரகாரம் மாற்றப்பட்டிருக்க வேண்டிய ஆகக்குறைந்த மீதமுள்ள தொகையொன்று உள்ளதா?**
   ஆகக்குறைந்த மாற்றல் தேவைப்பாடு இவ் விதிகளில் குறிப்பிடப்படவில்லை. எனினும், விதிகளின் படி அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை நிறைவுசெய்த பின்னர் குறிப்பிட்ட கலண்டர் மாதத்தில் பெறப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் மொத்த மீதமுள்ள மீதியையும் இலங்கை ரூபாவிற்கு மாற்றுமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.
5. **விதிகளின் 4 iv நியதிகளின் படி கடன் மீள்செலுத்துகைகள் மற்றும் பிரயாண நோக்கங்கள் 'ஒரு மாதகால கடமைப் பொறுப்புக்களுக்கு' அனுமதிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட முடியுமா?**
   இல்லை. ஒரு மாதகால கடமைப் பொறுப்புக்கள் பொருட்கள் மற்றும் பணிகளின் பொருத்தமான ஏற்றுமதியுடன் நேரடியாகத் தொடர்புடைய பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவுடன் மட்டுமே தொடர்புடையதாகும்.
   ஒரு மாதகால கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது 180 நாட்கள் கால அவகாசம் பிரயோகிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஒரு மாதகால கடமைப் பொறுப்பு காலத்தில் பயன்படுத்தப்படாத பெறுகைகளை மாற்றல் செய்யுமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.
6. **வாடிக்கையாளரின் வேண்டுகோளிற்கிணங்க மாற்றலுக்காக ஏற்றுமதிப் பெறுகைகளை வேறொரு வங்கிக்கு அனுப்ப முடியுமா?**
   இல்லை. அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக அனுமதித்ததன் பின்னர், இலங்கையில் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை பெறுகின்ற வங்கி மீதமுள்ளவற்றை மாற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. ஏனைய வங்கிகள் அல்லது ஏனைய வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான பரிமாற்றல்கள் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான தொகை வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது.
7. **காலாண்டு மற்றும் அரையாண்டு அடிப்படையில் செலுத்த வேண்டிய கால கடன்கள் அல்லது மூலதனச் செலவினங்கள் அல்லது பாதுகாப்பு வசதிப்படுத்தலுக்கான காசு எல்லைக்காக குறிப்பிட்ட ஒரு கால அளவிற்கு வெளிநாட்டு நாணய இருப்பை உருவாக்குவதற்கான ஏதேனும் வாடிக்கையாளர் கோரிக்கைகளை வங்கியொன்று வசதிப்படுத்த முடியுமா?**
   இவ் விதிகளின் பிரயோகத் திகதி அன்று அல்லது அதற்கு பின்னர் எந்தவொரு நோக்கத்திற்காகவும் எந்தவொரு வகையிலும் ஏற்றுமதிப் பெறுகைகளின் திரட்சி அனுமதிக்கப்படவில்லை.
8. **விதிகளின் கீழான தேவைப்பாடுகளை பிரயோகிக்கும் பொருட்டு மாற்றலுக்கான வாடிக்கையாளர் அறிவுறுத்தல்கள் அடுத்துவருகின்ற மாதம் 7ஆம் திகதிக்குள் வங்கியினால் பெறப்படவில்லை ஆயின் என்ன செய்வது?**
   ஏற்றுமதியாளரிடமிருந்து ஆவணச்சான்று கிடைக்கப்பெறாவிடினும் குறிப்பிட்ட காலத்திற்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றல் செய்யுமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளின் நம்பகத்தன்மை மற்றும்.'.அல்லது அதன் உறுதிப்பாடுகளை நிறுவுவதற்கு தேவையான மற்றும் போதுமான ஆவணச்சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான அல்லது வழங்குவதற்கான பொறுப்பு அந்தந்த வங்கி மற்றும் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படுகிறது.
9. **180 நாட்களுக்கு பின்னர் பெறப்பட்டிருக்கக்கூடிய ஏற்றுமதிப் பெறுகைகளை வங்கி எவ்வாறு கையாள வேண்டும்?**
   குறித்துரைக்கப்பட்ட 180 நாட்கள் காலத்தினுள் திருப்பியனுப்பப்படாத ஏற்றுமதிப் பெறுகைகள் மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட கோரப்படுவதுடன், விதிகளின் நியதிகளின் படி அத்தகைய விதி மீறல்கள்/ இணங்கியொழுகாமைக்கு எதிராக மத்திய வங்கியால் நடவடிக்கை எடுக்கப்படும்.
   அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் உடனடியான இலங்கை ரூபா மாற்றலுக்கு உட்பட்டதாகும்.
10. **அத்தகைய பெறுகைகள் பணிகள் ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்டிருப்பின் தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் வெளிநாட்டு நாணயத்தை வெவ்வேறு வங்கிகளின் சொந்த கணக்குகளுக்கு மாற்ற முடியுமா?**
    இல்லை. பணிகள் ஏற்றுமதியின் அத்தகைய பெறுகைகளுக்காக விதிகளின் கீழான தேவைப்பாடுகளை பிரயோகிக்குமாறு பெறுகின்ற வங்கி கோரப்படுகின்றது.
11. **விதிகளின் நியதிகளின் படி அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளின் கீழ் உள்நாட்டு வழங்குநர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்க முடியுமா?**
    1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்திற்கிணங்க உள்நாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து கொடுப்பனவுகளும் இலங்கை ரூபாவில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனினும், பின்வரும் சந்தர்ப்பங்களில் உள்நாட்டு வழங்குநர்களுக்கு வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுகள் விதியின் 4ஈ இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளாக கருதப்பட முடியும்:
    i. இறுதி ஏற்றுமதிக்காக ஏற்றுமதியாளர் அதனை பயன்படுத்தியிருப்பின் உள்நாட்டு வழங்குநரினால் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களுக்கான கொடுப்பனவு.
    ii. ஏற்றுமதியாளருக்கு பொருட்களின் வழங்கலுக்காக உள்நாட்டு வழங்குநரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணய கடனொன்றின் மீள்செலுத்துகைக்கான கொடுப்பனவு.
12. **ஏற்றுமதி தொடர்பான வசதிப்படுத்தல்களுக்காக ஏற்றுமதி பெறுமதியின் 100 சதவீதம் வரை வழங்குவதற்கு வங்கிகள் அனுமதிக்கப்படுகின்றனவா?**
    அவர்களின் கடந்தகால தரவு, சந்தை நடைமுறைகள் மற்றும் நிலவுகின்ற பொருளாதார சூழல்களுக்கிணங்க அத்தகைய வசதிப்படுத்தல்களுக்கான வாடிக்கையாளரின் உண்மையான தேவைப்பாட்டினை வங்கிகள் மதிப்பிட வேண்டும்.
    இவ்விதிகளின் தேவைகளை தவிர்த்து வெளிநாட்டு நாணயத்தில் வசதிப்படுத்தல்களை வங்கிகள் நீடிக்க கூடாது.